# முஸ்லிம் திருமணங்களில் பலதாரமணத்தை முடிவுறுத்தல்

musawah
For Equality in the Family

முஸாவாஹ் கொள்கைச் சுருக்கம் #03

**பலதாரமணம்,[1] அவ்வுறவில் ஈடுபட்டுள்ள கணவர்களுக்கும், மனைவிகளுக்கும், பிள்ளைகளுக்கும் தீங்கை விளைவிக்கக் கூடியது என்பதைச் சான்றுகள் காட்டுகின்றன. (உதாரணத்திற்கு,** CEDAW Committee, 1994; Al-Krenawi et al., 2011; Campbell, et al., 2005 **ஐப் பார்க்கவும்) இது தனிநபர்களையும், குடும்பங்களையும், வீட்டிலுள்ளவர்களையும் உளைச்சலுக்குள்ளாக்குகிறது. அத்துடன், இது வீட்டு வன்முறை மற்றும் சமூக வன்முறைகளுக்கு இட்டுச் செல்லக் கூடியது.**

பலதாரமணம் என்பது 'இஸ்லாம்' நிறுவியதொன்றல்ல - இது இஸ்லாத்திற்கு முன்னரே நடைமுறையில் இருந்து வந்துள்ளது என்பதுடன், உலகெங்கிலும் பல சமூகங்களிலும், கலாசாரங்களிலும் மற்றும் மதம்சார் சமுதாயங்களிலும் இடம்பெற்று வந்துள்ளது. பலதாரமணத்தில் கணவர்கள் சமத்துவத்தை நிலைநாட்ட முடியாதவர்களாக இருந்தால் ஒரு மனைவியை மட்டுமே விவாகம் செய்துகொள்ள வேண்டும் என்ற விதி உள்ளடங்கலாகப் பலதாரமணம் தொடர்பாக அல்குர்ஆன் மட்டுப்பாடுகளை விதித்துள்ளது (சூரா அந்-நிஸா 4:3). மேலும், அனைத்து மனைவிகளையும் சமமாக நடத்துவது, அடிப்படையில் சாத்தியமற்றது எனவும் அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது (சூரா அந்-நிஸா 4:129).

இறைவன் மனித இனத்தை ஒற்றை ஜோடியிலிருந்து உருவாக்கினான் என்பதைக் கற்பிப்பதன் மூலம் அல்குர்ஆன் ஒரு துணை மணத்தையே விதியாக நிறுவுகின்றது (சூரா அந்-நிஸா 4:1). பலதாரமணம் என்பது, சில நிபந்தனைகளின் கீழ் மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ள ஒரு விதிவிலக்காகும்.

முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் கதீஜா நாயகி அவர்களுடன் செய்து கொண்ட முதலாவதும் மற்றும் மிகவும் நீடித்ததுமான விவாகமானது, ஒரு துணை மணமாகும். கதீஜா நாயகியின் மரணத்தின் பின்னர், அரசியல் மற்றும் கோத்திரக் காரணங்களுக்காக நபியவர்கள் பல தடவைகள் விவாகம் செய்து கொண்டார்கள். ஆனால், பலதாரமணத்தால் ஏற்படக் கூடிய தீங்கை அவர்கள் உணர்ந்தமையால் அத்தீங்கிலிருந்து தனது மகளைக் காப்பாற்றிக் கொள்ள தனது மருமகன் இரண்டாம் விவாகம் செய்வதற்கு மறுப்புத் தெரிவித்தார்கள் (ஸஹீஹ் அல் புகாரி 5230; ஸஹீஹ் முஸ்லிம் 2449 a).

மார்ச் 2018 இல் அல்-அஸ்ஹரின் தலைமை இமாம், ஷெய்க் அஹ்மத் அல் தாயிப், பலதாரமணத்தினால் பெண்களுக்கும், பிள்ளைகளுக்கும் ஏற்படும் தீங்குகள் பற்றிக் குறிப்பிட்டிருந்தார். இந்தத் தீங்குகளை அடையாளங் கண்டு கொண்டமையினால், உலகளாவிய ரீதியில் பெரும்பான்மையான முஸ்லிம் மற்றும் முஸ்லிமல்லாத நாடுகள் பலதாரமணத்தினைக் கட்டுப்படுத்தியுள்ளன.

இன்றைய சூழ்நிலையில், பலதாரமணத்தினால் விளைவிக்கப்படும் தீங்குகள் மிகவும் தெளிவாக உள்ளதன் அடிப்படையில் அல்குர்ஆனிய வழிகாட்டல்கள் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும். அத்துடன் பலதாரமணத்தை இறுக்கமாகக் கட்டுப்படுத்தி காலப்போக்கில் இவ்வழக்கத்தினை முற்று முழுதாகத் தடை செய்ய அரசாங்கங்கள் நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

வாழ்க்கைத் துணைகளதும், பிள்ளைகளதும், குடும்பங்களதும் நன்னிலைக்கு உறுதுணையளிக்கும் ஒருதுணைத் திருமண முறையினையே அல்குர்ஆன் பரிந்து பேசுகிறது

1 'பலதுணைமணம்' என்பது 'பலதாரமணம்' (ஒரு ஆண் ஒரே நேரத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட மனைவியரை விவாகம் செய்திருத்தல்); மற்றும் 'பலபுருசமணம்' (ஒரு பெண் ஒரே நேரத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட கணவர்களை விவாகம் செய்திருத்தல்) என்பதைக் குறிக்கும் ஒரு பொதுவான சொல்லான போதும், பலதாரமணம் என்பது மிகவும் பரவலாகக் காணப்படுகின்றதும், முஸ்லிம் குடும்பச் சட்டங்களில் அனுமதிக்கப்பட்டுள்ள ஒரே வடிவமுமாகும்.

# இது ஏன் முக்கியம்?

## ஒருதுணை மணமே விரும்பத்தக்க விவாக முறையாகும், ஏனெனில்:




### பலதாரமணம் மனைவியருக்குத் தீங்கானது:

பலதாரமண உறவுகளிலுள்ள முதல் மற்றும் அடுத்தடுத்த மனைவியர்கள் மன, உணர்வு மற்றும் உடல்ரீதியான பாதிப்புகளுக்கு உள்ளாகின்றனர். (Al-Krenawi, 2016; McDermott and Cowden, 2015 ஐப் பார்க்கவும்). கணவர்கள் தங்களது மனைவியரின் சிந்தனைகளில் பலதாரமண அச்சுறுத்தல்களை உருவாக்கி, அவர்களைப் பதட்டத்துக்குள்ளாக்கி அடிபணியச் செய்கின்றனர். பல மனைவியர்களை விவாகம் செய்த பின், வளங்கள், நேரம் மற்றும் அன்பை விநியோகிப்பதில் கணவர்கள் முழுக் கட்டுப்பாட்டினைக் கொண்டிருப்பர். முன்னுரிமை, அதிகாரம் மற்றும் விருப்பின் அடிப்படையில், கணவர்களினால் மனைவியர்கள் சமமற்ற முறையில் நடாத்தப்படக் கூடும். பலதாரமணத்தினால் ஏற்படக் கூடிய உளநல ஆரோக்கியத்தின் மீதான விளைவுகள் பற்றிய ஆய்வின் மீளாய்வின்படி, 'பொதுவாக, ஒருதுணைத் திருமணத்தில் ஈடுபட்டுள்ள பெண்களுடன் ஒப்பிடும் போது, பலதாரமணத்தில் ஈடுபட்டுள்ள பெண்கள் மத்தியில் உளநல ஆரோக்கியம்சார் சிக்கல்கள் குறிப்பிடத்தக்க அளவில் மிகவும் பரவலாகக் காணப்படுகின்றன' - இவை மன அழுத்தம், பதட்டநிலை, விரோதம், குறைந்த ஆயுள் மற்றும் திருப்தியற்ற மணவாழ்க்கை, குடும்பச் செயற்பாடுகளில் சிக்கற்தன்மை, மற்றும் மிகக் குறைவான சுயமரியாதை என்பவற்றை உள்ளடக்குகின்றன. (Shephard, 2013).



### பலதாரமணம் கணவர்களைச் சுமைக்குள் தள்ளுகிறது:


பலதாரமணத்தில் ஈடுபட்டிருக்கும் கணவர்கள் அவர்களது மனைவியர் மற்றும் பிள்ளைகளிடையே நேரம், அக்கறை மற்றும் வளங்களைச் சமன் செய்ய முயற்சிப்பதில் மன அழுத்தத்திற்கு முகங் கொடுக்க நேரிடும். 2015 இல் சவுதி அரேபியாவைச் சேர்ந்த மனநல மருத்துவ நிபுணரினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வானது, பலதாரமணம் இதய நோய் ஏற்படும் அபாயத்தை நான்கு மடங்குக்கும் மேலாக அதிகரிக்கின்றதுடன், அதன் அபாயம் மற்றும் தீவிரத்தன்மை மனைவியரின் எண்ணிக்கை அதிகரிப்பதுடன் அதிகரித்துச் செல்கின்றது எனக் குறிப்பிடுகின்றது (Caba, 2015).



### பலதாரமணம் விவாகங்களையும், குடும்பங்களையும் உளைச்சலுக்குள்ளாக்குகின்றது:

பல மனைவியர்களும் மற்றும் அவர்களது பிள்ளைகளும் தங்களது கணவர்/தந்தையிடம் இருந்து குறிப்பிட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட அளவு வளங்கள், கவனிப்பு மற்றும் நேரம் போன்றவற்றைப் பகிர்ந்து கொள்ள வேண்டியிருப்பதனால் (சில சமயங்களில் அவற்றுக்காகப் போட்டியிட வேண்டியிருப்பதனாலும்) பலதாரமணம் குடும்பங்களை நிதிரீதியாகவும், உணர்வுரீதியாகவும் உளைச்சலுக்குக்கு உள்ளாக்குகின்றது. 2001 இல் சவுதி அரேபியாவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், ஆய்வுக் காலத்தின் போது 55 சதவிகித விவாகரத்திற்குப் பலதாரமணம் காரணமாக இருந்தது என கண்டறியப்பட்டது. (Arab News, 2001). தாழ்மட்ட புறநகர்ச் சூழலில் வாழும் கணவர்கள் பெரும்பாலான நேரங்களில் தமது மனைவியர் மற்றும் பிள்ளைகளுடன் இருப்பதில்லை என்பதுடன், அவர்களது தேவைகளை நிறைவேற்றுவதும் இல்லை என்பது பெண்களுக்கு மத்தியில் காணப்படும் போதியளவு சமூக நலன் மற்றும் பாதுகாப்பின்மை போன்ற பிரச்சினைகளை மேலும் வளர்க்கின்றது. (Al-Sharmani, 2017).

### பலதாரமண விவாகங்களின் கீழுள்ள பிள்ளைகளுக்கு இவ்விவாகமுறை அநீதி இழைக்கிறது



பலதாரமணக் குடும்பங்களில் இருக்கும் பிள்ளைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட கற்கைகளின் மீளாய்வில், அப்பிள்ளைகள் ஒருதுணைத் திருமணக் குடும்பங்களில் இருக்கும் பிள்ளைகளை விடவும் மிக அதிகளவான உளநல மற்றும் சமூகம்சார் பிரச்சினைகளைக் கொண்டிருப்பதாகவும், கல்விசார் நடவடிக்கைகளில் பின்தங்கிய நிலையில் இருப்பதாகவும் கண்டறியப்பட்டது (Al-Sharfi, et al., 2016). பலதாரமணம் மற்றும் ஒற்றைத் திருமண அமைப்புகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதொரு ஆய்வின் மீளாய்வுக் கட்டுரையானது, உப-சஹாரா மற்றும் மேற்கு ஆபிரிக்காவைச் சேர்ந்த பல்வேறுபட்ட நாடுகளில் வாழும் பலதாரமணக் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள், ஒற்றைத் திருமணக் குடும்பங்களில் இருக்கும் பிள்ளைகளை விடவும் அதிகரித்த மரணம் மற்றும் குறைவான ஊட்டச்சத்து போன்ற அபாயங்களைப் பாரிய அளவில் எதிர் கொள்கின்றனர் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றது (Henrich, et al., 2012).

### தேசிய பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தியை பலதாரமணம் எதிர்மறையாகப் பாதிக்கிறது:

பலதாரமணம், அதிகரித்துச் செல்லும் சமூக முரண்பாடுகள் மற்றும் தேசிய, சர்வதேசப் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பான பிரச்சினைகளுடன் தொடர்புபட்டுள்ளது (Hudson and McDermott, 2015; Guest, 2018; Tertilt, 2005ஐப் பார்க்கவும்). உலகெங்கிலும் உள்ள ஸ்திரமற்ற நாடுகள் 20 திலும் பலதாரமணம் கணிசமான விகிதத்தில் காணப்படுகின்றது (Guest, 2018). சஹாரா கீழமைப் பிராந்தியத்தில் இந்நிகழ்வுகள் அதிகமாக இருக்கும் இடத்தில், பலதாரமணம் மற்றும் அபிவிருத்தி தொடர்பாக மேற்கொள்ளப்பட்டதொரு ஆய்வில் கண்டறியப்பட்டதாவது, 'ஒற்றைத் திருமணத்தை அமுல்படுத்துவதுதன் மூலம் கருவுறுதல் 40 சதவீதம் குறைவதுடன் சேமிப்பு 70 சதவீதம் அதிகரிக்கின்றது, மற்றும் தனிநபர் உற்பத்தி 170 சதவீதம் அதிகரிக்கின்றது' ((Tertilt, 2005, pp.1365).).

# சட்டங்கள் ஏன் மாற்றப்படலாம்

**பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வெவ்வேறு பரந்த சூழ்நிலைகளின் அடிப்படையில் புனித நூல்களை விளக்கும் மனித முயற்சிகளை அடிப்படையாகக் கொண்டமைந்தவையே இன்றைய முஸ்லிம் குடும்பச் சட்டங்கள். முஸ்லிம் சட்டப் பாரம்பரியத்திலுள்ள பல போதனைகள் இந்தச் சட்டங்களைத் திருத்துவதற்கும், பலதாரமணத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கும் ஆதரவளிக்கின்றன:**

## குர்ஆனிலுள்ள விவாகத்துக்கான நியமமானது ஒற்றைத்துணைத் திருமணமாகும்.

இறையால் உருவாக்கப்பட்ட முதலாவது ஜோடி ஒற்றைத் திருமணத்தில் அமைந்ததாகும். விவாகத் துணையைப் பற்றிக் குறிப்பிடுவதற்கு இறைவன் ஸவ்ஜ் எனும் பதத்தைப் பயன்படுத்தியுள்ளான் (சூரா அந்-நிஸா 4:1). அரபுப் பாஷையில் அதன் அர்த்தம் ஜோடியில் ஒருவர் என்பதாகும். இது குர்ஆன் கூறும் விவாக முறையானது ஒற்றைத் திருமணமே என்பதனை மீண்டும் எடுத்துக் காட்டுகின்றது.

## குர்ஆன் பலதாரமணத்திற்கு எதிராகக் கணவர்களுக்கு அறிவுரை வழங்குகின்றது.

இரண்டு, மூன்று அல்லது நான்கு பெண்களை ஆண்கள் விவாகம் செய்து கொள்ளலாம் என்று சூரா அந்-நிஸா 4:3 இல் கூறப்பட்ட போதும், அதன் தொடர்ச்சியாகக் கூறப்பட்டுள்ளதாவது: 'ஆனால், சமத்துவத்தைப் பேணுவது பற்றி நீங்கள் அச்சம் கொள்ளுவீர்களானால் ஒரு பெண்ணை அல்லது வலக்கரம் சொந்தமாக்கிக் கொண்டவரை நீங்கள் விவாகம் செய்து கொள்ளுங்கள். இது உங்களைக் கடுமையான அநீதியைச் செய்வதில் இருந்தும் தூரமாக்கி வைக்கும்.' மேலும், சூரா அந்-நிஸா 4:129 இல் கூறப்படுவதாவது, 'நீங்கள் எவ்வளவுதான் தீவிரமாக விரும்பினாலும் பெண்களுக்கிடையில் நீதியாகவும், நியாயமாகவும் ஒரு போதுமே நடந்து கொள்ள முடியாது...'

## குர்ஆனில் திருமணத்திற்கான ஒரு விதிவிலக்கே பலதாரமணம்.

குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு விதிக்கும் (உதாரணமாக, நோன்பு நோற்பது, தொழுகையை நிறைவேற்றுவது, புனித யாத்திரையை மேற்கொள்வது (சூரா அல்-பகரா)) குறிப்பிட்ட சில நிபந்தனைகள் மற்றும் நெறிமுறைக் கொள்கைகளுக்கு உட்பட்ட விதிவிலக்குகள் எப்போதுமே உள்ளன. பலதாரமணம் தொடர்பாக சூரா அந்-நிஸாவின் 4:3 ஆனது விவாகத்தின் விதிவிலக்காக இரண்டு நிபந்தனைகளைக் கூறுகின்றது. அந்நிபந்தனைகளாவன (1) கணவனை இழந்த பெண்கள் மற்றும் பெற்றோரற்ற பிள்ளைகளை[2] சமூகத்தில் அவர்களுக்குரிய நீதியை வழங்கத்தக்க வகையில் பராமரிக்க முடியாத அச்சம், மற்றும் (2) பலதாரமணத்தில் இருக்கும் அனைத்துப் பெண்களின் (மற்றும் ஆணின்) சுந்திரமான உடன்பாட்டைக்[3] கொண்டிருத்தல். இந்த இரண்டு நிபந்தனைகளும் காணப்படாத இடத்தில் பாரிய அநீதியைத் தவிர்ப்பதற்காக இறைவன் ஆண்களை ஒரு மனைவியை மட்டுமே விவாகம் செய்வதற்கு வழிகாட்டுகின்றான்.

## நபியின் முன்னுதாரணம் பலதாரமணத்தினை ஆதரவளிக்கவில்லை.

பலதாரமணத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் பெரும்பாலும் நபி முஹம்மத் (ஸல்) அவர்களது சுன்னாஹ்வை (நடைமுறையை) மேற்கோள் காட்டுகின்றனர். ஆயினும் அவர் 25 வருடங்களுக்கு மேலாக அவரது முதல் மனைவி கதீஜாவுடன் ஒற்றைத் திருமணத்திலேயே ஈடுபட்டிருந்தார். கதீஜாவின் மரணத்தின் பின்னர், ஆயிஷாவைத் தவிர அவரது ஏனைய விவாகங்கள் அரசியல் காரணங்களுக்காகவும், கோத்திரக் காரணங்களுக்காகவும் கணவனை இழந்த அல்லது விவாகரத்தான பெண்களுடனேயே அமைந்திருந்தன. மேலும், ஒரு நம்பகமான பாரம்பரியம் குறிப்பிட்டுள்ளதன் படி, நபி அவர்கள், அவரது மருமகனான அலி இப்னு அபூ தாலிப் தனது மகளான பாத்திமாவை விவாகரத்துச் செய்தாலன்றி மற்றுமொரு பெண்ணை விவாகம் செய்து கொள்வதனைத் தடை செய்தார்கள்.

அல்-மிஸ்வர் பின் மக்ரமா கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர்(ஸல்) பீடத்தில் இருந்து கூறியதை நான் கேட்டேன். அவர் கூறியதாவது, "பனூ ஹிஷாம் பின் அல்-முகிரா,அவரது மகளை அலி இப்னு அபூ தாலிப் இற்கு விவாகம் செய்து வைக்க என்னிடம் வேண்டியிருந்தார். ஆனால் நான் அனுமதி வழங்கவுமில்லை. அலி இப்னு அபூ தாலிப் எனது மகளை விவாகரத்துச் செய்தாலன்றி அவரது மகளை விவாகம் செய்து கொள்ள நான் அனுமதி வழங்கப் போவதுமில்லை. ஏனெனில், பாத்திமா எனது உடலின் ஒரு பாகம், மேலும் அவர் காண வெறுப்பதை நானும் வெறுக்கின்றேன், மேலும் அவரைக் காயப்படுத்துபவை என்னையும் காயப்படுத்தும்." ஸஹீஹ் அல்-புகாரி *5230*

2 யதாமா என்னும் அரபுச் சொல் ஆங்கிலத்தில் பொதுவாக 'அநாதைகள்' என்றே மொழி பெயர்க்கப்படுகின்றது: ஆயினும் இது மிகவும் பொருத்தமான மொழி பெயர்ப்பு அல்ல. இது தந்தையரை இழந்த பிள்ளைகளையே (தாயை இழந்தவர்கள் அல்லர்) குறிப்பிடுகின்றது, மேலும், இது கணவனை இழந்த மனைவியையும் சுட்டலாம். சூரா அந்-நிஸா 4:127 முக்கியமாகக் குறிப்பிடுவது பெண் யதாமா (யதாமா அந் நிஸா) உதாரணமாகக் கணவரை மற்றும்/ அல்லது தந்தையரை இழந்த பெண்கள். புராதன அரபுக் கவிதைகளில் யதாமா என்ற சொல் கணவனை இழந்த பெண்களைக் குறிப்பிடவே பயன்படுத்தப்பட்டுள்ளது. தந்தையையும், தாயையும் இழந்த பிள்ளைகள் அரபியில் யதீம் என்று அழைக்கப்படுகின்றனர்.

3 தாப என்னும் வினைச் சொல், நன்றாக இருத்தல், நல்லதாக உணருதல், சுதந்திரமாக வழங்குதல், சுதந்திரமாக ஒப்புக் கொள்ளுதல் போன்ற மூலக் கருத்திலிருந்து வருகின்றது. அது இந்தப் பகுதியில் இரண்டு தடவைகள் வந்திருக்கின்றது: முதலாவதாக 4:3 மற்றும் இரண்டாவதாக 4:4. இரு தடவைகளிலும் அது பெண்களையே குறிப்பிடுகின்றது. ஆயினும், 4:3 இல் பாரம்பரிய மற்றும் நவீன விரிவுரையாளர்கள், பெண்களின் உணர்வுகளைப் புறக்கணித்து ஆண்கள், பெண்களைப் பற்றி நல்லுணர்வு கொள்வதற்காக (அதாவது அவர்கள் விரும்பியவர்களைத் தேர்ந்தெடுப்பது) அல்லது பெண்கள் உதாரணமாக அவர்களின் தாய்மார் போலும் அனுமதிக்கப்படாத ஒரு பிரிவினைச் சேர்ந்தவர்களல்ல என உறுதிப்படுத்துவதற்காக மட்டுமாக மட்டுப்படுத்தியுள்ளனர்.

## முஸ்லிம் சட்டப் பாரம்பரியம் பலதாரமணத்திற்கு வரையறைகளை விதிப்பதனை அனுமதித்துள்ளது.

ஹன்பலிச் சட்டம், கணவன் இரண்டாவது விவாகம் செய்தால் அவரை விவாகரத்துச் செய்யும் மனைவியின் உரிமையை அங்கீகரித்துள்ளது. இந்நடைமுறைகள் இஸ்லாத்தின் ஆரம்ப காலத்திலிருந்து ஆதரிக்கப்பட்டு வந்துள்ளன. நபியவர்களின் கொள்ளுப்பேத்தியும், அலி மற்றும் பாத்திமாவின் பேத்தியுமான ஸகினா பின்த் அல்-ஹுஸைன் அவரது விவாக ஒப்பந்தத்தில் பல்வேறு நிபந்தனைகளை விதித்ததுடன், அவர்களது விவாக காலத்தில் தனது கணவர் மற்றுமொரு மனைவியை எடுத்துக் கொள்ள அவருக்கு எந்த உரிமையும் இல்லை என்று நிபந்தனை விதித்திருந்தார். ஹன்பலிச் சட்டத்தைப் பின்பற்றாத சமூகங்களான ஜோர்தான், மொரோக்கோ, எகிப்து மற்றும் ஈரான் உள்ளடங்கலாகப் பல்வேறு முஸ்லிம் நாடுகள் இத்தகைய நிபந்தனைகளை உள்ளடக்குவதனை அங்கீகரித்துள்ளன. ஒரு மனிதனால் பல மனைவியர்களுடன் நீதியான, நியாயமான முறையில் நடந்து கொள்வது சாத்தியமற்றது என்ற அடிப்படையில் பலதாரமணத்திற்கு தூனீசியா தடை விதித்துள்ளது.

## பலதாரமணத்தினால் தீங்குகள் ஏற்படுத்தப்படுவதனை மார்க்க அறிஞர்கள் மற்றும் தலைவர்கள் அடையாளங் கண்டுள்ளனர்.

மார்ச் 2018 இல் அல்-அஸ்ஹரின் தலைமை இமாம், ஷெய்க் அஹ்மத் அல் தாயிப், 'பலதாரமணம், பெண்களுக்கும் மற்றும் பிள்ளைகளுக்கும் அநீதியானதாகும். அத்துடன் இந்தச் செயன்முறையானது குர்ஆனினதும், நபியவர்களது பாரம்பரியம் பற்றிய புரிதல்களினதும் பற்றாக்குறையின் விளைவானதாகும்.' இமாம், மேலும், எவ்வாறு ஒரு மனிதன் பல மனைவியரை விவாகம் செய்வதாயின் கட்டாயமாக நிபந்தனைகளுக்குக் கீழ்படிய வேண்டும் என்பதுடன், நியாயமாக நடந்து கொள்ள முடியாதவிடத்து பல மனைவியரைக் கொண்டிருப்பதனை அல்குர்ஆன் தடை செய்கிறது' என்பது பற்றியும் கூறியுள்ளார். (AFP, 2019).

## பலதாரமணம் பிரசித்தமானதல்ல

**2007 – 2012 மலேசியா கணக்கெடுப்பு**

| 60% | 92% |
|---|---|
| ஆன மனைவியர் மற்றும் பிள்ளைகள் பலதாரமணத்தில் ஈடுபட்ட தமது கணவர்/தந்தைக்கு தாம் ஆதரவளிக்கவில்லை எனக் கூறியிருந்தனர். | ஆன 18 வயதிற்கு மேற்பட்ட பிள்ளைகள் கூறியதாவது, அவர்களது சொந்த அனுபவங்களின் அடிப்படையில் அவர்கள் பலதாரமணத்தைப் பரிந்துரை செய்யப் போவதில்லை |

| 2008 ஈரானில் நடந்த ஆய்வு | 2016 மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்கக் கணக்கெடுப்பு |
|---|---|
| 96% | 1% |
| 96% ஆன கணக்கெடுப்பில் பங்கேற்ற பெண்கள் ஓர் ஆண் இரண்டாவது மனைவியைத் திருமணம் செய்து கொள்வதனை அனுமதிக்கவில்லை. | அனைத்து விவாகங்களுக்குள்ளும் 1% அல்லது அதற்கும் குறைவான அளவிலேயே பலதார விவாகங்கள் எகிப்து, மொரோக்கோ மற்றும் பலஸ்தீனம் போன்ற நாடுகளில் இடம்பெற்றுள்ளன. |

முஸ்லிம் பெண்களும், பிள்ளைகளும் பலதாரமணத்தை ஆதரிப்பதில்லை என எண்ணற்ற ஆய்வுகள் கூறுகின்றன. 2007 முதல் 2012 வரை மலேசியாவில் பலதாரமணத்தின் கீழிருந்த கணவர்கள், மனைவியர் மற்றும் பிள்ளைகளுக்கிடையில் நடைபெற்ற ஆய்வின் படி 60% மனைவியர் மற்றும் பிள்ளைகள் தமது கணவர்/தந்தை பலதாரமணத்தில் ஈடுபட்டமைக்கு ஆதரவளிக்கவில்லை என்பதனைக் கண்டறிந்தது. அதுமட்டுமன்றி 92% பிள்ளைகள் (18 வயதிற்கு மேற்பட்டவர்கள்) தங்களது சொந்த அனுபவங்களின் அடிப்படையில் தாம் பலதாரமணத்தை பரிந்துரை செய்யப் போவதில்லை என்று கூறியிருந்தனர்(Sisters in Islam, 2018).). 2008 இல் ஈரானில் நடந்த ஆய்வின் படி கணக்கெடுப்பில் ஈடுபட்ட பெண்களில் 96% ஆனவர்கள் ஓர் ஆண் இரண்டாவது திருமணம் செய்து கொள்வதற்கு உடன்படவில்லை (Institute for War and Peace Reporting, 2010). அண்மையில் மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்காவில் நடந்த கணக்கெடுப்பின் படி எகிப்து, மொரோக்கோ மற்றும் பலஸ்தீனம் போன்ற நாடுகளில் பலதாரமணம் மிகவும் அரிதான ஒன்றாகக் காணப்பட்டு வருகின்ற நிலை அதிகரித்து வருவதுடன் இந்நாடுகள் ஒவ்வொன்றிலும் நடந்த விவாகங்கள் அனைத்தினதும் 1% அல்லது அதற்கும் குறைவான அளவிலேயே பலதாரமணம் பதிவு செய்யப்பட்டுள்ளது (El Feki, et al., 2017, pp.68,118,224).

### பலதாரமணம் தொடர்பான சர்வதேச மனித உரிமைகளுக்கான கடப்பாடுகள் சில:

மனித உரிமைகளுக்கான சர்வதேச பிரகடனத்தின் உறுப்புரை 16(1) (CEDAW உறுப்புரை 16 இல்) பிரதிபலிக்கப்பட்டுள்ளது): 'ஆண்களுக்கும், பெண்களுக்கும் விவாகத்தின் போதும், விவாகத்தில் இருக்கும்போதும், விவாகத்தை முடிவுறுத்துவதிலும் சம உரிமையுண்டு.'

·CEDAW செயற்குழுவின் பொதுப் பரிந்துரை 21, பந்தி. 14 (1994): 'பலதாரமணமானது, ஓர் ஆணுக்கு நிகரான ஒரு பெண்ணின் சமத்துவ உரிமைக்கு முரணானது என்பதுடன், பெண்களுக்கும், அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் உணர்வுரீதியான மற்றும் நிதி தொடர்பிலான பாரதூரமான விளைவுகளைக் கொண்டிருப்பதனால் இத்தகைய விவாகங்கள் ஊக்குவிக்கப்படல் கூடாது என்பதுடன் தடைசெய்யப்படலும் வேண்டும்."

CEDAW செயற்குழுவின் பொதுப் பரிந்துரை 29, பந்தி. 27-28 (2013): '...பலதாரமணத்தினால் பெண்கள் மற்றும் அவர்களது பிள்ளைகளினது மனித உரிமைகள் மற்றும் பொருளாதார நன்னிலைக்கு நேரும் பாரதூரமான விளைவுகள் பற்றி இந்த செயற்குழு சுட்டிக்காட்டியுள்ளதுடன், இந்நடைமுறை இல்லாதொழிக்கப்பட வேண்டும் எனவும், பலதாரமணத்தில் ஈடுபட்டிருப்பவர்களின் பொருளாதார உரிமைகளைப் பாதுகாப்பதனை உறுதிப்படுத்தவும் வேண்டும் எனவும் தொடர்ச்சியாக அழைப்பு விடுத்து வருகின்றது.'

ஆபிரிக்கப் பெண்களின் உரிமைகள் தொடர்பிலான மனித மற்றும் மக்கள் உரிமைகளின் ஆபிரிக்க பட்டயத்திற்கான சாசனம்(Maputo Protocol) (2003): 'ஆண்களும், பெண்களும் சம உரிமைகளை அனுபவிப்பதையும், விவாகத்தில் சம பங்காளர்களாக இருப்பதனையும் அரசு தரப்பினர்கள் உறுதிப்படுத்தல் வேண்டும்... (உ) விவாகத்தின் விரும்பத்தக்க வடிவமாக ஒருதுணைத் திருமணம் ஊக்குவிக்கப்படல் வேண்டும்; அத்துடன் பலதாரமண உறவுகள் உள்ளடங்கலாக விவாகத்திலும், குடும்பத்திலுமுள்ள பெண்களின் உரிமைகள் மேம்படுத்தப்பட்டுப், பாதுகாக்கப்படுவதனை உத்தரவாதப்படுத்துவதற்காகப் பொருத்தமான தேசியச் சட்டவாக்க நடவடிக்கைகளை அவர்கள் எடுத்தல் வேண்டும்.

# திருத்தம் எங்கெல்லாம் இடம்பெற்றுள்ளது?

**பல நாடுகள் பலதாரமணத்தைத் தடை செய்யவும் அல்லது இறுக்கமாக மட்டுப்படுத்தவும் மேலும், பெண்களுக்கான நியாயத்தையும், நீதியையும் உறுதிப்படுத்தவுமாக நடவடிக்கைகள் எடுத்துள்ளன.**

## பலதாரமணத்தினைச் சட்டப்படி தடை செய்தல்:



### தூனீசியா

சூரா அந்-நிஸா 4:129 ('நீங்கள் பெண்களுக்கிடையில் நியாயமானவர்களாக ஒரு போதும் இருக்க முடியாது, அதுவே உங்களது தீவிர ஆசையாக இருந்த போதும்...') எந்தவொரு கணவனாலும் பல மனைவியரைச் சமமாக நடாத்த இயலாது என்ற புரிதல்களின் அடிப்படையில் அமைந்த 1956 ஆம் ஆண்டின் சட்டத்தின் கீழ் பலதாரமணம் தடை செய்யப்பட்டுள்ளது. இது சிறைத் தண்டனை அல்லது அபராதம் விதிக்கப்படக் கூடிய தண்டனைக்குரியதொரு குற்றமாகும். பலதாரமணமானது ஒழுங்கற்றதாகவும், இரத்துச் செய்யப்படக் கூடியதாகவும் கருதப்படுகின்றது.

## பலதாரமணத்தினைச் செய்வதற்கு நீதிமன்றத்தின் அங்கீகாரம் மற்றும் ஏற்கனவே உள்ள மனைவியரிடமிருந்து ஒப்புதல் போன்றவற்றின் தேவைப்பாடு:



### அல்ஜீரியா:


பலதார விவாகங்கள் கட்டாயமாக நீதிமன்றத்தினால் அங்கீகரிக்கப்படல் வேண்டும் என்பதுடன், ஏற்கனவே உள்ள மனைவியரின் ஒப்புதலுடன் மட்டுமே செய்யப்படலாம். கணவன் தான் பலதாரமணத்தினைச் செய்வதற்கான நியாயத்தையும் மேலும் அனைத்து மனைவிகளையும் நியாயமாக நடாத்துவதற்கும், அனைத்து விவாகங்களதும் அத்தியாவசியமான தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யக் கூடிய தகைமையையும் கொண்டிருப்பதற்கான ஆதாரத்தினையும் வழங்கினால் மட்டுமே நீதிமன்ற அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

### இந்தோனேசியா:

பலதார விவாகங்கள் நீதிமன்றத்தினால் அங்கீகரிக்கப்படல் வேண்டும் என்பதுடன் ஏற்கனவே உள்ள மனைவியரின் ஒப்புதலுடன் மட்டுமே அது செய்யப்படலாம். ஏற்கனவே உள்ள மனைவி (1) விவாகக் கடமைகளை நிறைவேற்ற முடியாதவராக இருந்தால்: (2) உடல் நலக்குறைவினால் அல்லது குணப்படுத்த முடியாத நோயினால் துன்புறுபவராக இருந்தால் அல்லது (3) பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ள முடியாதவராக இருந்தால் மட்டுமே நீதிமன்றத்தினால் அனுமதி வழங்கப்படும்.

### ஈராக் (குர்திஸ்தான் பிரதேசம்):

பலதார விவாகங்கள் நீதிமன்றத்தினால் அனுமதியளிக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன், ஏற்கனவே உள்ள மனைவியரின் ஒப்புதலுடன் மட்டுமே செய்யப்படலாம். அதுமட்டுமன்றி சில நிபந்தனைகளும் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். நீதிபதியின் அனுமதி இன்றி பலதார விவாகம் செய்யும் ஆண்களுக்குச் சிறைத் தண்டனையும், அபராதமும் விதிக்கப்படும்; தண்டனைகளைத் தள்ளுபடி செய்வதில் இருந்தும் நீதிபதிகள் தடை செய்யப்பட்டுள்ளனர்.



## பலதார விவாகத்தினைச் செய்வதற்குள்ள அதிகாரபூர்வ (நீதிமன்றம் முதலிய) அனுமதியின் தேவைப்பாடு:



### வங்காளதேசம், பாகிஸ்தான்:

பலதாரமணமானது, முன்மொழியப்பட்ட விவாகமானது, நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ததாயும் (ஏதும் இருப்பின்) அவசியமானதும், நீதியானதும் என்பதில் திருப்தியடைந்த (தலைவரையும், மற்றும் கணவனின் சார்பிலும் மனைவி அல்லது மனைவியர்கள் சார்பிலும் ஒவ்வொரு பிரதிநிதியையும் கொண்ட) மத்தியஸ்த சபையின் எழுத்து மூல அங்கீகாரத்துடன் மட்டுமே அனுமதிக்கப்படும்.

### சிங்கப்பூர்:

பலதாரமணங்கள், அரசால் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தரால் (காதி) அங்கீகரிக்கப்படல் வேண்டும். இங்கு, கணவன் தனது மனைவியர்களின் நிதி, உடல், மற்றும் உணர்வுசார் நன்னிலையைச் சமன் செய்யக் கூடியவர்: ஏற்கனவே உள்ள அவரது விவாகம் சிறந்த முறையில் போய்க் கொண்டிருக்கின்றது: புதிய விவாகம் அனைத்துத் தரப்பினருக்கும் நன்மை விளைவிக்கக் கூடியது என்பவற்றில் காதி திருப்தியடைதல் வேண்டும்.

### மொரோக்கோ

2004 இன் மௌதவானாவின் முகவுரையானது, சூரா அந்-நிஸா 4:3 மற்றும் 4:129 இன் படி, பலதாரமணத்துக்கு எதிராக ஊக்குவிப்பதுடன் சட்டவிரோதமான விவாகங்களைத் தடுப்பதற்காகக் கடுமையான நிபந்தனைகளுக்கு அமைவாக மட்டுமே அனுமதித்துள்ளது. அசமத்துவம் ஏற்படும் அபாயம் இருப்பின் அல்லது திருமண ஒப்பந்தத்தில் கணவன் இரண்டாவது விவாகம் செய்வதை மனைவி மறுத்திருக்கும் பட்சத்தில் பலதாரமணங்கள் தடை செய்யப்பட்டுள்ளன. விவாகத்திற்கு விதிவிலக்கான மற்றும் புறநிலையான நியாயப்படுத்தல் நிரூபிக்கப்பட்டால் மற்றும் கணவன் இரு குடும்பங்களுக்கும் ஆதரவு வழங்கப் போதியளவு வளங்களைக் கொண்டிருந்தால் மற்றும் அனைத்துப் பராமரிப்பு உரிமைகள், வதிவிடம், மற்றும் வாழ்வின் அனைத்து அம்சங்களிலும் சமத்துவம் போன்றவற்றிற்கு உத்தரவாதம் அளிக்கக் கூடியவராக இருந்தால் நீதிமன்றங்கள் பலதாரமணங்களை அங்கீகரிக்கக் கூடும். முதல் மனைவி கட்டாயம் சமூகமளித்தல் வேண்டும் என்பதுடன் அவரது ஆலோசனையும் பெறப்பட்ட பின்னரே அங்கீகாரம் வழங்கப்படலாம்.

## பலதார விவாகத்தினைச் செய்த கணவனிடமிருந்து விவாகரத்தினைக் கோருவதற்கான மனைவியின் உரிமை:



### ஆப்கானிஸ்தான் (ஷீஆ), அல்ஜீரியா, பஹ்ரைன், எகிப்து, ஜோர்தான், லெபனான், மொரிட்டானியா, மொரோக்கோ, பலஸ்தீனம்:

பெண்கள், விவாக ஒப்பந்தத்தில் தனது கணவர் மற்றுமொரு மனைவியை எடுத்துக் கொள்ள முடியாது என்ற நிபந்தனையைக் குறிப்பிட முடியும். விவாக ஒப்பந்தத்தின் இந்த நிபந்தனையை அவரது கணவர் மீறினால் அவரை விவாகரத்துச் செய்யும் உரிமை பெண்களுக்கு உண்டு.

### ஆப்கானிஸ்தான் (ஸுன்னி), எகிப்து:

தனது கணவரின் பலதார விவாகம் தனக்குத் தீங்கு விளைவிக்கின்றது என்று காட்ட முடிந்தால் ஒரு பெண் விவாகரத்துக் கோரி நீதிமன்றத்தில் மனுச் செய்ய முடியும்.

### வங்காளதேசம், பாகிஸ்தான்:

சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு முரணாகக் கணவர் இன்னொரு திருமணம் செய்து கொண்டால் மனைவி விவாகரத்துக் கோர முடியும்.



# சமத்துவத்தையும், நீதியையும் எவ்வாறு உறுதிப்படுத்துவது?

பலதாரமணம் கணவர்களுக்கும், ஏற்கனவே உள்ள மற்றும் அடுத்தடுத்த மனைவியருக்கும், இந்த விவாகங்களால் பெற்றுக் கொண்ட பிள்ளைகளுக்கும் ஏற்படுத்தக் கூடிய தீங்குகள் மற்றும் இத்திருமணங்களால் உருவாக்கப்படுகின்ற சமூகப் பிரச்சினைகள் என்பவற்றைக் கருத்திற் கொண்டு அரசுகள் ஒற்றைத் திருமணத்தை ஊக்குவிக்கவும், பலதாரமணத்தைக் கட்டுப்படுத்தி, இறுதியில் அச்செயன்முறையை முற்றுமுழுதாகத் தடை செய்யவும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். பலதாரமணத்திற்கு இட்டுச் செல்லும் காரணிகள் மற்றும் அதனால் விளைவிக்கப்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணவென மதத் தலைவர்கள், நம்பிக்கை சார்ந்த மற்றும் சமூக அமைப்புகள், பாடசாலைகள் மற்றும் குடும்பங்கள், அரசுடன் இணைந்து செயற்படுதல் வேண்டும்.

சூரா அர்-ரூம் *30:21* விளக்குவதாவது: ‘மற்றும் அவனது அடையாளங்களில், இது, நீங்கள் அவர்களுடன் சாந்தியுடன் வாழவென உங்களில் இருந்தே உங்களது துணையை அவன் உருவாக்கினான், மற்றும் உங்களிடையே *(இதயங்களில்)* அன்பையும் கருணையையும் வைத்தான்: நிச்சயமாக அதனைப் பிரதிபலிப்பவர்களுக்கு அதில் அறிகுறிகள் உண்டு.’ தங்களது விவாகத்தில் ஒருவருக்கொருவர் அர்ப்பணிப்பாகவும், ஒருவரையொருவர் பலப்படுத்திக் கொள்ளவும் கூடிய இரு துணைகளுக்கு இடையில் மாத்திரமே இது சாத்தியமாகும்.

## மனைவியர், பிள்ளைகள் மற்றும் குடும்பங்களின் நன்னிலைக்கு உறுதுணையாக விரும்பத்தக்க விவாக வடிவமாக ஒற்றைத் திருமணத்தை ஊக்குவிக்குக.

### இஸ்லாமியப் போதனைகள்

**அனைத்து மனைவியர்களோடும், கணவனால் நியாயமாகவும், நீதியாகவும் இருக்க முடிந்தால் மட்டுமே பெற்றோர் அற்றவர்கள் மற்றும் கணவனை இழந்த பெண்கள் தொடர்பில் பலதாரமணத்துக்கான அனுமதியை குர்ஆன் வழங்கியுள்ளது. மேலும், இது அசாத்தியமானதொரு விடயம் எனவும் அல்குர்ஆன் குறிப்பிடுகிறது.**

### அரச சட்டங்கள்

**சமத்துவம் மற்றும் பாரபட்சமின்மைக்கான பிரிவுகள் விவாகத்தில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் சம உரிமை இருப்பதனைத் தேவைப்படுத்துகின்றன. பலதாரமணம் இதனை அனுமதிப்பதில்லை.**

### ஒற்றைத் திருமணமே அனைத்து விவாகங்களுக்குமான விதியாக இருத்தல் வேண்டும்.

### சர்வதேச மனித உரிமைகள்

**ஆண்களுக்கும் ,பெண்களுக்கும் விவாகம் தொடர்பாக, விவாகத்தின் போதும் மற்றும் அதனைக் கலைக்கும் போதும் சம உரிமை இருக்க வேண்டும் என்பதனை அரசுகள் உறுதி செய்ய வேண்டும். பலதாரமணம் இந்த தரநிர்ணயத்துடன் முரண்படுகின்றது.**

### வாழ்வியல் யதார்த்தங்கள்

**பலதாரமணம் முதலாவது மனைவிக்கும் மற்றும் அடுத்தடுத்த மனைவியர்களுக்கும், அவர்களது பிள்ளைகளுக்கும் மற்றும் பலதாரமணத்தில் ஈடுபட்டுள்ள கணவர்களுக்கும் தீங்கு விளைவிக்கிறது. இது வீட்டிலும், சமூகத்திலும் வன்முறை அதிகரிக்க வழிவகுக்கிறது.**

**முஸாவாஹ் இனால் 2021 இல் வெளியிடப்பட்டது**

musawah

இந்தக் கொள்கைச் சுருக்கமானது முஸ்லிம் குடும்பச் சட்டங்களில் காணப்படும் முக்கிய விடயங்கள் தொடர்பிலான தொடரின் ஒரு பகுதியாகும். இந்தச் சுருக்கங்கள் முஸாவாஹ் இனது வலைத்தளத்தில் காணக் கிடைக்கும்: www.musawah.org

முஸ்லிம் குடும்பச் சட்டத் திருத்தம் தொடர்பான பொதுவான வளங்களுக்கும், இந்தச் சுருக்கத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள வளங்களின் மூலஆதாரங்களுக்கும் இச்சுருக்கம் பற்றிய முஸாவாஹ் இனது வலைத்தளப் பக்கத்தைப் பார்வையிடவும்.

இந்த ஆவணத்தை வெளியிடுவதற்கான நிதி அரபு நாடுகளுக்கான ஐ.நா மகளிர் பிராந்தியத் திட்டத்தினால் வழங்கப்பட்டதுடன், சுவீடனின் சர்வதேச மேம்பாட்டு ஒத்துழைப்பு நிறுவனத்தினால் (SIDA) நிதியளிக்கப்பட்ட ‘பால்நிலை சமத்துவத்திற்கான ஆண்கள் மற்றும் பெண்கள்’ என்ற சட்டகத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இதில் வெளிப்படுத்தப்பட்டுள்ள கருத்துகள் முஸாவாஹ்வின் கருத்துக்களே என்பதுடன் இவை எந்தவொரு நிதி வழங்குநர்களின் கருத்துகளையும் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை.

மூலதன இலாபம் பெற்றுக் கொள்ளும் நோக்கம் இல்லாதவிடத்தில் இந்த வெளியீட்டின் எந்தவொரு பகுதியும் நகலெடுக்கப்படலாம், மீள் உருவாக்கம் செய்யப்படலாம், தழுவல்கள் மேற்கொள்ளப்படலாம், மீள் பாவனைக்குரிய வகையில் சேமித்து வைக்கப்படலாம் அல்லது உள்ளூர்த் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக எந்தவொரு வடிவத்திற்கும் அல்லது எந்த வகையிலும் மாற்றியமைக்கப்படலாம். ஆனால் அனைத்துப் பிரதிகளும், மீள் உருவாக்கங்களும், தழுவல்களும், மற்றும் மொழி பெயர்ப்புகளும் முஸாவாஹ்வினை ஆதாரமாகக் குறிப்பிட்டு அங்கீகரித்தல் வேண்டும். மீள் உருவாக்கம் செய்யப்பட்ட, தழுவல்கள் மேற்கொள்ளப்பட்ட, அல்லது மொழி பெயர்ப்புச் செய்யப்பட்டவற்றின் பிரதி ஒன்று முஸாவாஹ் இனது வலைத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலத்திரனியல் அஞ்சலுக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

www.musawah.org | musawah@musawah.org | fb/ig : musawahmovement | twitter : @musawah